## 25. அருளுடைமை

**241.** *அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
*பூரியார் கண்ணு முள*

**கொடிய உள்ளம் கொண்ட இழி மக்களிடம்**
**கொட்டிக் கிடக்கலாம் கோடி செல்வம் !**
**கொண்டாடும் அருட்செல்வம் மட்டும்**
**கொண்டிருப்பவர்கள் உயர் மக்கள் மட்டுமே !**

**242.** *நல்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றால்*
*தேரினும் அஃதே துணை*

**நாம் நல்ல வழிகளில் ஆராய்ந்து**
**நாடியே அருளைப் பெற வேண்டும் !**
**அளவற்ற ஆற்றல் மிகுதியால் ஆராய்ந்தாலும்**
**'அருளே' வாழ்க்கைக்குத் துணை !**

**243.** *அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த*
*இன்னா உலகம் புகல்*

**அருள் நிறைந்த மனம் படைத்தவர்களுக்கு**
**அறியாமை எனும் இருள்**
**அமைந்த துன்பம் சூழ் வாழ்க்கை**
**அமையவே அமையாது !**

**244.** *மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப*
*தன்னுயி ரஞ்சும் வினை*

**உயிர்கள் அனைத்திடமும் மண்ணில்**
**உள்ளன்போடு காத்திடும் அருளாளன்**
**உயிரின் பொருட்டு அஞ்ச மாட்டான்**

**245.** *அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்*
*மல்லன்மா ஞாலங் கரி*

**உள்ளத்தில் உள்ள அருளின்**
**உணர்வினால் துன்பத்தின் வலியை**
**உணராமல் கடமையாற்றலாம் ! அதற்கு**
**உலகத்தில் காற்றின் வலிமையே சாட்சி !**

**246.** *பொருள்நீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அருள்நீங்கி*
*அல்லவை செய்தொழுகு வார்*

**அருளற்ற மனம் கொண்டு தீமைகளைப் புரிபவர்கள்**
**அர்த்தமில்லாத வாழ்க்கை வாழ்ந்து**
**அருமைக் குறிக்கோளையும் மறந்தவர்கள் ஆவர் !**

**247.** *அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்*
*கிவ்வுலகம் இல்லாகி யாங்கு*

**பொருள் இல்லாதவர்க்கு இல்வாழ்க்கைப்**
**பொருளாதாரச் சிக்கலினால் நன்றாக இராது !**
**அருளும் கருணை உள்ளமும் இல்லாதவர்களுக்கு**
**அருமையான வீடுபேறு வாழ்க்கை இராது !**

**248.** *பொருளற்றார் பூப்ப ரொருகால் அருளற்றார்*
*அற்றார்மற் றாதல் அரிது*

**பொருளில்லார் மீண்டும் தேடித் தேடிப்**
**பொருளைப் பெறலாம் ! செல்வத்தை அடையலாம் !**
**அருளில்லார் வாழ்க்கையில்**
**அளவற்றச் சிறப்பையும் பலனையும் பெறுதல் அரிது !**

**249.** *தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்*
*அருளாதான் செய்யும் அறம்*

**தெளிந்த அறிவு இல்லாதவன் – மெய்ஞானத்தின்**
**தெளிந்த உண்மைப் பொருளை அடைவதைப் போல்**
**தெள்ளிய அருள் இல்லாதவன் செய்யும் அறச் செயல் இருக்கும் !**

**250.** *வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்*
*மெலியார்மேற் செல்லு மிடத்து*

**தன்னைவிட மெலிந்தவரைத்**
**தண்டனையாகத் துன்புறுத்தும் போது**
**தன்னைவிட வலியவர் முன்**
**தன்னிலை என்னாகும் என எண்ண வேண்டும் !**